

அண்ணல் அம்பேத்கரை இழிவாக பேசிய ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து செய்யூர் தெற்கு ஒன்றிய திமுக மற்றும் இடைக்கழி நாடு பேரூர் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் செய்யூரில் நடைபெற்றது அதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். அருகில் பேரூர் செயலாளர் மோகன்தாஸ், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் தசரதன், அவைத்தலைவர் இனிய, முன்னாள் ஒன்றிய குழு பெருந்தலைவர் கிருஷ்ணவேணி தணிகாசலம் மாவட்ட கவுன்சிலர் ஜெயலட்சுமி மகேந்திரன் உள்ளிட்ட திமுக கட்சியினர் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நந்தனம் கி.மதி தலைமை! பா.பாக்கியதாஸ் ஏற்பாட்டில்!

## துணை முதல்வர் பிறந்தநாள்! பள்ளி மாணவர்களுக்கு அறுசுவை உணவு - நலஉதவிகள்!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, டிச.21-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஆதரவற்ற பள்ளி மாணவிகளுக்கு ளுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட வழங்கும் நிகழ்ச்சி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமையில், பகுதி துணை செயலாளர் பா.பாக்கியதாஸ் ஏற்பாட்டில் இன்று 21/12/2024 சனிக்கிழமை மதியம் 12:00 மணியளவில் சென்னை, ஆழ்வார்பேட்டை டி.டி.கே சாலையில் உள்ள புனித பிரான்சிஸ் சேவியிர் பள்ளியில் உள்ள ஆதரவற்ற மாணவிகளுக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவி நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மயிலை மேற்கு பகுதி நிர்வாகிகள் ஜி. ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல். வி.அசோக், அகல்யா விஸ்வநாதன்,ஜி.முருகையன் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு,சீ.கிருஷ்ணன் மூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ் குமார், அ.நாகராஜன், மு. இ. ஏழுமலை, மூ.ராஜேந்திரன் வரவேற்கின்றனர்.

சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறுசுவை மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்குகின்றார்.

இதில் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் வருக வருக என வரவேற்கிறோம்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் நன்றி கூறுகிறார்.



சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,சாந்தோம் சி.எஸ்.ஐ.காது கேளாதோர் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.அறுசுவை உணவு வழங்கினார்.அ. தவநேசன்,அ.ரேவதி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.பகுதிச் செயலாளர்கள் எஸ். முரளி,நந்தனம் கி.மதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, கே.ஏழுமலை எம்.சி, உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதி, வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானு சலீம் செய்திருந்தார்.

ஜி.வெங்கடேசன் தலைமை! எஸ்.மதன்மோகன் வரவேற்புரை! ஆடுதுறை உத்திராபதி திருச்சி சேகர் சிறப்புரை!

## சேப்பாக்கம் 115 வது வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### தயாநிதி மாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, டிச.21,

சென்னை தெற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி, 115 வது வட்ட தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (21.12.2024 சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு ஆல்தோட்டம், ஆர்.டி.பி. மெயின் தெரு இராயப்பேட்டையில் நடைபெறுகின்றது.

பகுதிச் செயலாளர் மண்டலக்குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

வட்டச் செயலாளர் ஜி.வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.

ஈஸ்வரி வெங்கடேசன் எம்.சி., எஸ்.எஸ்.குமார், கே.சங்கர், ராஜன், வனமேணி, ராஜா, டி.அசோக்குமார், ஜி.செல்வக்குமார், என்.சாம்சன்,ஜெ.அரசு,அப்பாஸ் அலி, ஜி.வி.பாலாஜி, ஆர்.மனோஜ்குமார், எச். முகமது சபேர், ஆர். கௌதம், என்.ஆகாஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் தயாநிதி மாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, ஆடுதுறை உத்திராபதி, திருச்சி சேகர் ஆகியோர் கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இதில் ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ்,ஆர்.பிரபாகரன், எம்.சின்னராஜ், கே.கோபி, அ.தமீம் அன்சாரி, ஆர்.பாலசந்தர்,ஆர். ராஜராஜன், டாக்டர் எஸ். ரியாஸ்மகமது, மிக்ஸி கே.அலீப், எம்.சி.பி.இளையராஜா, எஸ்.கே.ராஜ், மல்லிகாபீ, பா.சிதம்பரம், பி. ராஜேஷ், எஸ்.எச். ரகமத்துல்லா,பி.கதிரவன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

டி.முருகன், வீடியோ ஆர்.வினோத்,ஏ.வேல்முருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

த.பார்த்திபன் தலைமை! எஸ். பாஸ்கரன் எம்.சி., அரிமா சு.சேகர் முன்னிலை!

## வேளச்சேரி மேற்கு 178வது வட்டத்தில் உதயநிதியின் உதயநாள் விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன், தமிழச்சி தங்கப்பாண்டியன், ஜே.எம்.எச்.அசன் மௌலானா, சிறப்புரை!

சென்னை, டிச.21

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி, 178வது வட்ட தி.மு.க. சார்பில் உதயநிதியின் உதயநாள் விழா பொதுக்கூட்டம், இன்று (21.12.2024 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் தரமணி 100 அடி சாலை (துங்கம் பேன்சி அருகில்) யில் நடைபெறுகிறது.

தலைமை: த. பார்த்திபன் (வட்ட செயலாளர்), வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், எம்.சி. அரிமா சு.சேகர் முன்னிலை வகிக்கிறார்கள்.

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதியின் சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதியின் உதய நாள் விழாவில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்),

தலைமை கழக பேச்சாளர்கள்: பூங்காநகர் கண்ணன், ச.ஷாநவாஸ் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., ஜெ. எம்.எச்.அசன்மௌலானா, எம்.எல்.ஏ, வேளச்சேரி பி. மணிமாறன், வேளச்சேரி வே. ஆனந்தம், மகேஸ்வரி முருகவேல் எம்.சி. த.ஜெகதீசன்.

வரவேற்புரை: சே. மைதிலி, சி.சூர்யாமணி வண்ணன், ஆ.மகாதேவன், எம்.பாபு, கோ.மனோகர், கோ.வேதகிரி, பி.புஷ்பலதா, ம.காந்தி, எஸ்.நரசிம்மன், ஆர்.சிவா, ஆர். பழனிவேலன், ஏ.பாஸ்கர், சி. சிவக்குமார், கே.செந்தி ல்வேலன், நா.ஷியாம்குமார். பி.சாய்ஜெயகாந்தன், இரா. துரைராஜ், எம்.சி, எஸ். குணசேகர், கழக த.ரமேஷ், ஆர்.பாலசுந்தரம், முகேஷ் கண்ணா, எச்.வெங்கடேசன், ஜி.வரதன், சி.பழனி, எம்.ஏ.சங்கர், பொ.த.எழில்வானான், ந.டில்லிகுமார். வட்டச்செயலாளர்கள்: தே.கோபி, பொ.த.மதி வாணன், ஜி.பி.எஸ்.பாலசதீஷ், கே.என்.தாமோதரன், எஸ். முருகவேல், .பாரதிதாசன், வி.சக்திவேல் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

வி.சண்முகநாதன், எ.கன்னிகான், எஸ்.மணிகண்டன், ஸ்கார்பியோவி.ரவி,சி.வெங்கி, யமாகா மோகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

அண்ணல் அம்பேத்கரை அவமதித்து

## அமித்ஷாவை கண்டித்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டம்!

திருவள்ளூர், டிச.21

மாநிலங்களவையில் டிசம்பர் 17 அன்று நடந்த அரசியல் சாசனம் மீதான விவதத்தின் போது பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, "தற்போது 'அம்பேத்கர், அம்பேத்கர்' என்று பேசுவது பேஷனாகி விட்டது. இப்படி சொல்வதற்கு பதிலாக கடவுளின் நாமத்தை பல முறை உச்சரித்திருந்தால், அவர்களுக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கும்," என்று கூறினார். இது ஒரு பெரும் சர்ச்சையாக வெடித்தது.இதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் புதன்கிழமை (டிசம்பர் 18) நாடாளுமன்றத்திற்கு வெளியே அம்பேத்கர் படத்தை கையில் ஏந்தி போராட்டம் நடத்தினர். மேலும், அமித்ஷா கருத்து குறித்து பல்வேறு எதிர்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், நேற்று (டிசம்பர் 19) அன்று இந்திய அரசியலைமப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா கண்டித்து தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என திமுக அறிவித்துள்ளது. இந் நிலையில்

திருவள்ளூர் மத்திய மாவட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் உள்ள இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் ஆலோசனைப்படி நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி குமணன்சாவடி பகுதியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் முன்னிலையில் அம்பேத்கர் அவர்களின் திருஉருவப்படத்தை ஏந்தி கழகத்தினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேச்சுக்கு கண்டனத்தை தெரிவித்தார்கள்.

திருநின்றவூர் நகர திமுக சார்பில் திருநின்றவூர் காந்தி சிலை அருகில் அமித்ஷா உள்துறை அமைச்சர் அமிஷாவை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத்தினர்கள் ஈடுபட்டனர்கள்

திருவேற்காடு நகர திமுக சார்பில் சுந்தரர் சோழவரம் பகுதியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை அருகில் நகரக் கழகச் செயலாளர் என்.இ.ஏ.மூர்த்தி தலைமையில் கழகத்தினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமிஷாவை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.

அதேபோல் திருவள்ளூர் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் காக்களூரில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் அம்பேத்கரின் திருஉருவபடத்தை ஏந்தி கழகத்தினர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்றனர்.

அதேபோல் திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் தொழுவூர் வெள்ளகுளம் பகுதியில் உள்ள அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலை எதிரில் ஒன்றிய கழகச் செயலாளர் சே. பிரேம் ஆனந்த் தலைமையில் கழகத்தினர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டினார்கள்.

பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் நேமம் ஊராட்சியில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலை எதிரில் ஒன்றிய கழகச் செயலாளர் டி.தேசிங்கு தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

பூவிருந்தவல்லி நகர திமுக சார்பில் நகர கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை தலைமையில் கழகத்தினர்கள் அம்பேத்கர் திருவுருபடத்தை ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டினார்கள்.

எல்லாபுரம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் தங்கம்முரளி தலைமையில் வாணிம் சத்திரம் பகுதியில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைச் எதிரில் கழகத்தினர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆவடி மேற்கு தெற்கு கிழக்கு வடக்கு பகுதி திமுக சார்பில் ஆவடி திருமுல்லைவாயில் பட்டாபிராம் அண்ணாநகர் பகுதியில் பகுதிச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பேபிசேகர் நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஆகியோர் தலைமையில் கழகத்தினர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

திருமழிசை பேரூர் கழக திமுக சார்பில் திருமழிசை பகுதியில் பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவள்ளூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் ஒன்றிய கழக செயலாளர் புஜ்ஜி. ராமகிருஷ்ணன் தலைமையில் கழகத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்கள்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி. ஜெரால்டு, மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், ப.நரேஷ் குமார், த.எத்திராஜ், ஜி. விமல்வர்ஷன், எம்.முத்துதமிழ்செல்வம், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், மாநகர செயலாளர் சன்.பிரகாஷ் உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தி பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து பம்மல் இரட்டைப்பிள்ளையார் கோவில் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பகுதி கழக செயலாளர்,மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி தலைமையில் பகுதி நிர்வாகிகள் ப.காளேஸ்வரன், ஆர்.உமாசங்கர், என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேல், என்.கே.ரவிச்சந்திரன்,சு.மனோகர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வட்ட செயலாளர்கள் அ.அனிஸ்டன், வி.எஸ். ஜெகநாதன், மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமதுஅப்பாஸ், எம்.சுகுமாரன்,பி.ஸ்ரீதர் , மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, ஆ.மதினாபேகம், சத்யா மதியழகன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

அண்ணல் அம்பேத்கரை அவமதித்த அமித்ஷாவை கண்டித்து

## துறைமுகம் பகுதி தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### எஸ்.முரளி - எஸ்.இராஜசேகர் - இரா.நரேந்திரன் பங்கேற்பு!

சென்னை, டிச. 20 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையையேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதல்படி, சட்ட மாமேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், இந்து சமயம் அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி.கே.சேகர் பாபு அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, கலெக்டர் அலுவலகம் எதிரில் பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ். இராஜசேகர் ஆகியோர் தலைமையில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர் இரா.நரேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம்.தேவன், மாவட்டப் பொருளாளர் இசட்.ஆசாத் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.இ.கனி, ஆர்.கலைச்செல்வி, 5 வது மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, வட்டக் கழகச் செயலாளர்கள் பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், எல்.சத்தியநாரயணன், ஆர்.எ.அஸ்லாம், த.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார்,ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம், பகுதி நிர்வாகிகள் மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, எஸ்.சந்தியாகு, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பி.விஜயகுமார், பி.பிரதிப்குமார், எல்.சம்பத்குமார், மாவட்ட பிரதிநிதிகள் டி.எஸ்.சேகர், எல். எழிலரசு, லண்டன் முருகன், எம்.நாராயணன், நா. ரஞ்சித் விஜயாலயன், டி. போஸ், எம்.சுரேஷ், தங்கமணி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எம். எஸ்.அசாருதீன், துணை அமைப்பாளர்கள் தாஸ் (எ) சண்முகசுந்தரம், இம்ரான், சுமன் ராஜ், விஷ்ணு சக்கரவர்த்தி, மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வட்டக் கழகச் செயலாளர் கே.கவியரசு நன்றி கூறினார்.



சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவு படுத்தி பேசிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களை கண்டித்து குன்றத்தூர் நகர தி.மு.க. ஏற்பாட்டில் குன்றத்தூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் கோ சத்தியமூர்த்தி தலைமையில் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் இளைஞர் அணி அனைத்து அணிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கரை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவமதித்து பேசி உள்ளார். அதனை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பிற்கிணங்க, பகுதிக் கழகச் செயலாளர், நகரமைப்புகுழுத் தலைவர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பொன்.சதாசிவம், வி.ஜெயராமன், இ.எம்.சாம்சன், த. ராஜாராம், பி.நவீன், ரமாதேவி செந்தில்குமார் எம்.சி, எம்.பெருமாள், எம்.சாந்தகுமார், எம்.செந்தில்குமார், வேலவன், பொ.செந்தில்குமார், வழக்கறிஞர் சி.கார்த்திகேயன், எஸ்.தீபன்குமார், எஸ்.மாறன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.